தலைவர் கலைஞர் அவர்கள் விபத்துக்களில் உயிர் இழந்தவர்களுக்கு ரூ. 10,000 உடல் ஊனமுற்றோர்க்கு உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் யாராவது விண்ணப்பித்தால் அவர்களுக்கும் வழங்குகின்ற கருணை உள்ளம், 83 லட்சம் ஏழைகளுக்கு இலவச அரிசி, வேட்டி, இலவச திருமண உதவித் திட்டம், மகப்பேறு உதவித் திட்டம், கணவனை இழந்தோருக்கு ரூ. 2,000 வழங்கும் உதவித் திட்டம், முதியோர் உதவித் தொகை, ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு உரிமை ஆக்கிடும் திட்டம் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி இப்படி எண்ணில் அடங்கா மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதி நிலை அறிக்கை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று என்று சொல்லி இறுதியாக ஒன்றே ஒன்று.

துணிந்தவருக்கு சிறைச்சாலை, அறிவுச் சோலை;
துணியாதவருக்கோ ஆறு நாளிலே ஜாமீன் எழுதுவதே வேலை;
இல்லை அந்த வேலை எங்களுக்கு'—

என்று சொல்லி நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை (20-3-90) காலை 9 00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

—எதுவுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

4. 1990-91-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 59 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (59 புத்தகங்கள்).

5. 1990-91-ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

6. 1990-91-ஆம் ஆண்டிற்கான பொதுக்கடன்/திருப்பிச் செலுத்துதல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

7. 1990-91-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 37/ பொதுப்பணிகள்—பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்),

8. 1990–91–ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 39— சாலைகள், பாலங்கள் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

9. 1990–91–ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 53 பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

10. 1990–91 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 54 சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

11. 1990–91–ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

12. பதவிகள் சம்பளவீதங்கள் பற்றிய விவர அறிக்கை (1990–91) ஆங்கிலம்.

13. 1990–91–ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை.

14. 1990–91–ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பு.

15. 1990–91–ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பின் இணைப்புகள்.

16. 1990–91–ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி—2, திட்டங்கள்).

17. 1990–91–ஆம் ஆண்டு திட்டம் (திட்டம்–வரவு செலவுத் திட்ட இணைப்பு) (1990–91–ஆம் ஆண்டு விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு).

18. 1990–91–ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

19. 1990–91–ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல்.

20. 1990–91–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

21. 1990–91–ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள்.

22, 1990–91–ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

23. 1990–91–ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்து முதல் அமைச்சர், மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.

TRUTH ALONE TRIUMPHS